# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 130/2021 குமரையா (பிசா1) தேதி: 03.03.2026.</u>**

**<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு சொத்து பூர்விக சொத்து என்ற அடிப்படையில் தான் நர்ன் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். விளாத்திக்குளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்ற OS No. 167/1995 என்ற வழக்கின் அடிப்படையில் 3/4 பாகம் எங்களுக்கு உள்ளது என நான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் நடைபெற்ற OS No. 99/1998 என்ற வழக்கின் தீர்ப்புரை, தீர்ப்பாணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் 1வது சாட்சியாக வாதி தரப்பில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். OS No. 99/1998 வழக்கு தாக்கல் செய்ய விபரம் யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். மேற்படி வழக்கில் உள்ள விபரங்கள் உண்மையானவை. அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புரையில் வழக்குரை சுருக்கம் என உள்ளதில் 10 வருட காலமாக 3ம் பிரதிவாதியானவர் வாதிகளின் குடும்பத்தை கவணிக்காமல் இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணையில் மேற்படி வழக்கு 14.08.1995 தேதியில் தாக்கல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி 1985ம் வருடம் முதல் 3ம் பிரதிவாதி அந்த வழக்கில் வாதிகளின் குடும்பத்தை கவணிக்காமல் இருந்துள்ளார் என்றால் சரிதான். ராமசந்திரன், கிருஷ்ணன் எனது சகோதரர்களா என்றால் இல்லை. மதியழகன் எனது சகோதரன் கிடையாது. எனது தந்தையுடன் பிறந்த நபர்கள் ஒரே ஒரு சகோதரி மட்டுமே உண்டு. எனது தாத்தா பெயர் முத்துராமலிங்கம். என் தாத்தாவின் உடன் பிறந்த நபர்கள் எத்தனை பேர் என்றால் அவர் ஒருவர் மட்டுமே. அவருக்கு உடன் பிறந்த நபர்கள் கிடையாது. வழக்கு சொத்து என் தாத்தாவிற்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது. எனது அத்தைக்கும் எனத தந்தைக்கும் பாகப்பிரிவினை எதாவது நடந்ததா என்றால் எனது அத்தைக்கு எனது தந்தை தனியாக ஒதுக்கிவிட்டார். நான் 8ம் வகுப்பு படிக்கும் போது எனது தாத்தா இறந்து விட்டார். எனதுதாத்தா இறந்து சுமார் 45 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கலாம். என் தாத்தா இறப்பிற்கு பின்பு தான் எனது தந்தை அவரது

சகோதரியான எனது அத்தைக்கு ஒதுக்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு பூர்விக சொத்து என கூறியுள்ள நிலையில் அந்த சொத்துககளை அவருக்கு யாராவது பிரித்து கொடுத்தார்களா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை. எனது தாத்தாவின் அப்பா மற்றும் அவர்களின் உடன் பிறந்த நபர்கள் பற்றி எனக்கு தெரியாது. 2013 ம் வருடம் தான் எங்கள் பெயரை சேர்க்க பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 ம் வருடத்திற்கு முன்பு வழக்கு சொத்துகளுக்கு எங்கள் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். 2013 ம் வருடத்திற்கு முன்பு தாவா சொத்திற்கு வாதி வேல்சாமி பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். ஆனால் அது தவறான பட்டா ஆகும். பி.சா.ஆ.6 ஆவணம் 2018 ம் வருடம் ஏற்பட்டதாக உள்ள நிலையில் அதற்கு மூன்பே அல்லது அதற்கு அடுத்தோ சாகுபடி அடங்கல் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பி,சா.ஆ.11 ஆவணம் 2018 ம் வருடம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6, பி.சா.ஆ.11 ஆவணங்களை ஒரே கிராம நிர்வாக அலுவலர் தான் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் தான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கேட்டவுடன் ஆவணங்களை பார்த்து கிராம நிர்வாக அலுவலகர் உடனே சான்று வழங்கிவிட்டார். கிராம நிர்வாக அலுவலர் அனுபவத்தை பார்த்து தான் அந்த சான்று வழங்கினார். கிராம நிர்வாக அலுவலர் என்னை விசாரணை செய்தும் அந்த இடத்தை பார்த்தும் தான் சான்று வழங்கினார். என்னை தவிர வேறு நபர்களை கிராம நிர்வாக அலுவலகர் விசாரித்தாரா என்றால் பக்கத்து நிலத்துக்காரர்களை விசாரித்திருக்கலாம், எனக்கு தெரியாது. நான் அனுபவம் செய்து வரும் சொத்தின் நான்கு மால்கள் விருசம்பட்டி கிராம எல்லைக்கு வடக்கு, சக்தியம்மாள் புஞ்சைக்கு தெற்கு, முத்துவுடையார் புஞ்சைக்கு மேற்கு, குமராண்டி நாடார் புஞ்சைக்கு கிழக்கு ஆகும். பி.சா.ஆ.11 ல் நான் குறிப்பிடும் மால் விபரங்கள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் கூறும் மால் விபரங்கள் சரியாளவை. நான் குறிப்பிடும் மால் விபரங்களில் கண்ட நபர்கள் யாரையாவது சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் அவர்கள் யாரும் நீதிமன்றத்திற்கு வரமாட்டார்கள். வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட கருப்பசாமி என்பவர் தான் நான்கு மால் விபரத்தில் வருகிறார் என்றாலும், அதனால் தான் அவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 ஆவணத்தில் கருப்பசாமி

புஞ்சைக்கு மேற்கு என கிராம நிர்வாக அலுவலகர் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் பி.சா.ஆ.11 இந்த வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு எடுக்கப்பட்ட ஆவணம் ஆகும். நான் கூறியுள்ள மால் விபரம் தான் தற்போது உள்ள விபரம் ஆகும். வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் தான் வாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் பற்றி எனக்கு தெரிய வந்தது. பட்டா மாறுதல் போது அதில் இருந்த பட்டாதாரர் வேல்சாமி என்பவர் யார் என விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அப்படி ஒரு நபர் இல்லை.

**<u>மறு விசாரணை:</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.